# வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் ஒவ்வொரு படியாக - நிகழ்ச்சி 5

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு கிறிஸ்தவர்களில் நான்கில் ஒருவர் அவர்களுடைய வாழ்நாளில்தானே இயேசு மீண்டும் வந்திடுவார் என்பதை விசுவாசிக்கின்றனர். எதிர்காலத்தை குறித்து கரிசனையுடைய நம் அனைவருக்கும் தேவன் கூறிடும் செய்திதான் வெளிப்படுத்தின விசேஷம். அதில் சபைகளுக்கு இயேசு கிறிஸ்து இறுதியாக சொல்லிடும் வார்த்தைகள் மற்றும் முக்கிய நிகழ்வுகளான எடுத்துக்கொள்ளப்படுதல், இரண்டாம் வருகை, இறுதி நியாயத்தீர்ப்பு, சாத்தானுக்கு என்ன சம்பவிக்கும் என்பதையும், அந்திகிறிஸ்து, தவறான மார்க்கத்தை பின்பற்றுகிறவர்களின் நிலைகளை கூறுகிறது. உபத்திரவகாலத்தில் நடக்க இருக்கும் கொடூரமான காரியங்களை கூறி எதிர்காலத்தை குறித்து இயேசு எச்சரிக்கிறார், அர்மகேதொன் யுத்தம், இந்த பூமியில் அவருடைய இரண்டாம் வருகை போன்றவை. இந்த புத்தகத்தில் ஆயிரவருட அரசாட்சி, இந்த பூமியில் வாழ்ந்த ஒவ்வொருவருக்குமான இறுதி நியாயதீர்ப்பு, தம்முடைய ஜனங்களுக்காக நித்தியத்தில் என்ன திட்டங்களை தேவன் வைத்திருக்கிறார் என்பதை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு, உங்களை படிப்படியாக இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தை தெளிவாக புரிந்துகொள்ளும் விதத்தில் நடத்திசெல்ல இருக்கிறோம், தேவன் முன்னறிவித்திருக்கும் எதிர்கால நிகழ்வுகள் சம்பவங்கள் எல்லாம் சமீபித்திருப்பதை நீங்கள் புரிந்துகொள்ள உதவிடுவோம். இந்த விசேஷித்த ஜான் அன்கேர்பர்க் நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வணக்கம். இன்றைக்கு நாம் அர்மகேதொன் யுத்தத்தை குறித்து பார்க்க இருக்கிறோம். அதோடு ஆயிரவருட அரசாட்சி மற்றும் பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு நித்திய வாழ்வை குறித்தும் பார்க்க இருக்கிறோம். வெளிப்படுத்தின விசேஷம் என்ன சொல்லுகிறது. உங்களுக்கு இவற்றை எடுத்துக்கூற ஒருவர் இங்கு இருக்கிறார். அவருடைய பெயர் Dr. ஜிம்மி டியோங். ஒரு பத்திரிக்கையாளர், எருசலேமில் இருக்கிறார், 1993 லிருந்து நடக்கும் காரியங்களை பதிவு செய்திருக்கிறார். அந்த நாளிலிருந்து பதவிவகுத்த எல்லா பிரதம மந்திரிகளையும் அறிந்திருக்கிறார். அவர்கள் ஒவ்வொருவருடனும் நேர்காணல் நடத்தியிருக்கிறார். மத்திய கிழக்கில் இருக்கும் மற்ற தலைவர்களையும் அறிந்திருக்கிறார். இவர் ஒரு சிறந்த வேதாகம தீர்க்கதரிசன பண்டிதர். அவர் வேதத்தை முழுமையாக அறிந்திருக்கிறார், அதை நீங்களே பார்க்கப்போகிறீர்கள். நம்முடைய நோக்கம் என்னவென்றால் வெளிப்படுதத்தின

விசேஷத்தை நீங்கள் புரிந்துகொள்ளும் வித்தத்தில் படிபடியாக உங்களை நடத்த வேண்டும். இந்த புத்தகத்தை குறித்த அச்சத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. தேவன் நமக்கு அதிகப்படியான தகவல்களை கொடுத்திருக்கிறார். வேதாகமத்தில் இந்த புத்தகம் இடம்பெற ஒரு நோக்கம் இருக்கிறது. அது என்ன என்பதைத்தான் ஜிம்மி கூறுகிறார். ஜிம்மி, இந்த மூன்று தூண்களை வைத்திருக்கிறீர்கள், 3 அடையாளமாக இருக்கும் தூண்கள், இவையனைத்தும் வெளிப்படுத்தலில் ஒன்றன்பின் ஒன்றாக நடக்கும் சம்பவங்களை நாம் புரிந்துகொள்ள உதவுவதோடு அந்த நிகழ்வுகளை நமக்கு விளக்கி கூறுகிறது. நீங்க சொல்லுங்க.

**Dr. ஜிம்மி டியோங்**: வெல், 3 முக்கிய நிகழ்வுகளை பற்றி கூறினீர்கள் – எடுத்துக்கொள்ளப்படுதல், கிறிஸ்துவின் வருகை மற்றும் உபத்திரவ காலம், பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு. வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கும் 3 முக்கிய நிகழ்வுகளை குறிக்கும் மூன்று தூண்கள் இங்கே இருக்கிறது. எடுத்துக்கொள்ளப்படுதல், நான்காம் அதிகாரம் வசனம் 1, நான்கு 2 லிருந்து 19:10 வரைக்கும், 16 அதிகாரங்கள் 7 ஆண்டு உபத்திரவ காலத்தை பற்றி விளக்கமாக கூறுகிறது. சரி, இந்த தூண் கிறிஸ்து மீண்டும் பூமிக்கு வருவதை குறிக்கிறது. அது வெளிப்படுத்தலின் 19ம் அதிகார்கம், வசனம் 11லிருந்து இருக்கிறது. அதற்கு பிறகு 20ம் அதிகாரத்தில் ஆயிர வருடம் என்ற எண்ணை பார்க்கிறோம். அது ஆயிர வருட அரசாட்சியை குறிக்கிறது. இயேசுகிறிஸ்து அந்த ஆயிர வருட அரசாட்சியில் இராஜியத்தை ஆளுகிரவராக இருப்பார், அப்போது சாத்தான் கட்டடப்பட்டவனாக இருப்பான், அதினால் பூமியில் சமாதானம் நிலவிடும். இந்த கடைசி தூண், 3 தூண்களில் மூன்றாவது தூண், வெளிப்படுத்தின விசேஷத்தின் மூன்றாவது முக்கிய நிகழ்வை குறிக்கிறது, பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு, வெளிப்படுத்தல் 20:11-15. அதற்கு பிறகு, நித்திய வாழ்வு, புதிய வானம்,புதிய பூமி மற்றும் புதிய எருசலேம்.

எடுத்துக்கொள்ளப்படுதளுக்கு பிறகு, 6ம் அதிகாரம், 3 நிலையிலான 7 நியாயதீர்ப்புகள் துவங்குகிறது. மொத்தம் 7 முத்திரை நியாயதீர்ப்பு, 7 எக்காள நியாயதீர்ப்பு, 7 கலச நியாயதீர்ப்பு: அந்த 7 வருட உபத்திரவ காலத்தில் இந்த 21 நியாயதீர்ப்புகளும் ஒன்றன்பின் ஒன்றாக மிகவும் மோசமாக இருக்கும்.

முதல் மூன்றரை ஆண்டு காலத்தில், கள்ளத்திருச்சபையின் நிழல் இருந்துகொண்டிருக்கும். வெளிப்படுத்தல் 17ல் இருக்கிறது. முதல் முத்திரை உடைக்கப்படும்போது, அந்திகிறிஸ்து உதயமாவான். அவன் வெள்ளை குதிரையின் மேல் வருவான், தலையில் கிரீடம் இருக்கும், கையில் வில் இருக்கும், அம்பு இருக்காது, அதற்கு அர்த்தம் 7 ஆண்டு உபத்திரவ காலத்தின் துவக்கத்தில் சமாதான உடன்படிக்கையை உறுதிசெய்வான். உண்மையில், சமாதான உடன்படிக்கையை உறுதிபடுத்திடுத்தும்போது, தானியேல் 9:27ல் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம், இவையனைத்தும் உபத்திர காலத்திற்கான துவக்கம் என்பதை புரிந்துகொள்ள வேண்டிய மணியோசையாக இருக்கும். இரண்டாவது முத்திரை உடையும்போது சிவப்பு குதிரையில் எரிவருகிறவன் தோன்றுவான். அது தேசங்கள் ஒன்று திரண்டுவதன் துவக்கம்: சிலவற்றை பார்த்தோம் ரஷ்யா, ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், எத்தியோபியா, சோமாலியா, சூடான், சீரியா, எகிப்து,

துருக்கி. அதோடுகூட சவூதி அரேபியா மற்றும் லீபனோன். இஸ்ரேலின் யூதர்களுக்கு விருத்தமாக படையெடுத்து வர இந்த தேசங்கள் ஒன்றுதிரண்டு வரயிருப்பதை பார்த்தோம். இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும் போதே அதற்கான வேலைகள் நடந்துகொண்டிருப்பதை காண்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நீங்க குறிப்பிட்டு சொன்ன இந்த தேசங்கள் தான் வரும் என்று எப்படி உறுதியாக சொல்ல முடியும்?

**Dr. ஜிம்மி டியோங்**: ஏனென்றால் குறிப்பிட்ட பகுதிகளை வேதம் இதை தெளிவுபடுத்துகிறது. நான் இஸ்ரேலை தாக்கும் என்று கூறிய இரண்டு தேசங்களான சீரியா மற்றும் எபித்தை பற்றி, தானியேல் 11:40-45 கூறுகிறது, மற்ற தேசங்களை பற்றி எசேக்கியல் 38மற்றும் சங்கீதம் 83 கூறுகிறது. தேவனுடைய வார்த்தைகளில் கடைசி காலத்தில் எந்தெந்த தேசங்கள் இஸ்ரேலுக்கு விரோதமாக வரும் என்ன செய்யும் என்று எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நாம் இதுவரை பார்த்தது 7 முத்திரை நியாயதீர்ப்பு, 7 எக்காள நியாயதீர்ப்பு, 7 கலச நியாயதீர்ப்பு. கடைசி பகுத்தி மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும் அதை வெளிப்படுத்தல் 16:12-16ல் பார்க்கிறோம், அங்கு சொல்லப்படுகிறது, :சாத்தான் பூலோகமெங்கிலும் உள்ள ராஜாக்களை சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்கு கூட்டி சேர்ப்பான். அப்பொழுது எபிரேய பாஷையிலே அர்மகேதொன் எண்ணப்பட்ட இடத்திலே அவர்களை கூட்டி சேர்த்தான்.” சரி, நாம் புரிந்துகொள்ளும் வித்தத்தில் பார்க்கும்போது, உலக நாடுகளில் இருந்து ஒன்று கூடும் இவர்கள் யார்? இது சீக்கிரத்தில் சம்பவிக்குமா?

**Dr. ஜிம்மி டியோங்**: ஒருவேளை இது சீர்க்கிரத்ஹ்டில் நடக்க கூடும். நான் எதற்காக அப்படி சொல்கிறேன் என்றும் உங்களுக்கு சொல்லுகிறேன். ஏனென்றால் உபத்திரவ காலத்தின் பின் பாதியான மூன்றரை ஆண்டுகளில், அதன் பின்னையத்தில் நிழலிடுவது பாபிலோனாக இருக்கும். இன்றைய காலத்தின் ஈராக். அதுதான் சர்வதேச தலைமையகமாக ஒரே உலகம், பொருளாதாரம், அரசியல், மற்றும் அந்திகிறிஸ்துவை தலைமாக கொண்டு செயல்படுவதாக இருக்கும். இதுதான் எல்லா தேசங்களும் ஒன்று திரண்டு வரும்வரை ஆட்சி செய்திடும்.

நீங்க சில நோமிடங்களுக்கு முன்பு கூறிய வசனமானது ஆறாவது கலச நியாயத்தீர்ப்புக்கு இடையே ஒரு பிரிவை எடுத்துரைக்கிறதாக காணப்படுகிறது, கிழக்கே தூர தேசத்திலுள்ளவர்கள் எருசலேம் நகரத்தில் கூடிடுவார்கள், அதுதான் தேசங்கள் அனைத்தும் திரண்டு வருவதை உறுதிசெய்கிறது. ஆனால் அதற்கு முன்பாக, ஐப்பிராத்து நதியின் அந்த இடம், நிஜமான பாபிலோன் நகரம், அது சுமார் நான்காயிரத்து ஆண்டுகளுக்கு முன்பு, நிம்ரோத் என்ற, நோவாவின் கொள்ளுப்பேரன், ஒரே உலக அமைப்பை ஏற்ப்படுத்தினான், ஒரே பொருளாதாரம், அரசியல், அரசாங்க அமைப்புகள், அதே நிலைதான், உபத்திரவ காலத்தின் பின்பாதியான மூன்றரை ஆண்டுகள் நடைமுறைக்கு வந்திடும்.

16ம் அதிகாரம், 17ம் வசனத்திலிருந்து, கடைசி கலச நியாயதீர்ப்பை பற்றி சொல்லப்பட்டிருகிறது, 21 நியாயதீர்ப்புகளில் 21வது நியாயதீர்ப்பு பூமியில் நடக்கும். அதுதான் பாபிலோன் மாநகரத்தின் அழிவாக இருக்கும், அங்குதான் அந்திகிறிஸ்து தலையகத்தை நிருவியிருப்பான். அதன்பின்பு உலக சேனைகள் எருசலேமிற்கு விரோதமாக படையெடுக்கும். அர்மகேதொனில் பாளயமிருங்குவது அர்மகேதொன் யுத்தத்திற்காண சிறந்த செயல்திட்டமாகும். உதாரணத்திற்கு அந்த 100 தேசங்களையும் சேர்த்து மில்லியன் வீரர்கள் என்று வைத்துக்கொள்வோம். நாம 100 மில்லியன் சேனைகள் எருசலேமில் கூடுவார்கள் என்பதை  பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். அவர் ஒலிவ மலையில் மறுபடியும் கால் பாதிக்கும் பொது, சகரியா 14:4, ஒலிவமலை பிளந்திடும், மலைகளின் பள்ளத்தாக்கில் உலகின் தேசங்கள் எல்லாம் கூடும்படி வழியை அமைத்திடும். இதுதான் எஸ்ரேயேல் பள்ளத்தாக்கை குறிக்கும் விளக்கமாக இருக்கிறது. கர்மேல் பர்வதம் கேட்டிருப்பீர்கள், மோரியா  மலை இருக்கிறது, தாபோர் பர்வதம் இருக்கிறது, கில்போவா பர்வதம் இருக்கிறது. இந்த பள்ளத்தாக்கை சுற்றி 1,000 சத்துர மைல்களுக்குள் இந்த மலைகளெல்லாம் இருக்கிறது, அந்த மாதிரியான இடத்தில்தான் அர்மகேதொன் யுத்தம் நடக்கும். இதை கேளுங்கள், இயேசுகிறிஸ்துவை எதிர்த்து 100 மில்லியன் சேனைகள் பாளயமிறங்க அந்த இடம் நிச்சயமாக ஏற்றதாக இருந்திடும்.

வெல், இயேசு திரும்ப வரும்போது தேவாலயத்தை கட்டிடுவார். அந்த ஆயிறாண்டு ஆலயத்திலிருந்து அவர் ராஜ்யத்தை ஆளுகை செய்வார், அதனால் முதலில் அதை கட்டிடுவார், எசேக்கியல் 40-46ல் இருக்கிறது. அதற்க்கு பிறகு எஸ்ரேயேல் பள்ளத்தாக்கிற்கு சென்றிடுவார், அவர் பேசுவார் அவர்கள் மாண்டுபோவார்கள். அவர் என்ன சொல்லப்போகிறார் என்று யெநக்கு தெரியாது, ஒருவேளை மாண்டுபோங்கள் என்றிடலாம். வேதம் சொல்கிறது வெளிப்படுத்தல், 14ம் அதிகாரம், வசனங்கள் 19 மற்றும் 20, அர்மகேதொன் யுத்தம் நடக்கும் பொழுது, அந்த யுத்தத்தில் இருந்த குதிரைகள் மக்கள் மீதிருந்து இரத்தம்  புரண்டோடியதாம், அது 176 மைல்களுக்கு குதிரைகளின் கடிவாளம் மட்டும் பெருகிவந்ததாம். 100 மில்லியோன் சேவகர்கள் இருந்தால், ஒரு சாத்தியமான கூற்றுப்படி பார்த்தால், எனது கருத்து, அந்தனை ஜனங்களும் அங்கு நிறுக்கும் பொது, அது 600 மில்லியன் கால் காலன் அளவு இரத்தமிருக்கும். அதாவது 176 மையிலின் ஒவ்வொரு அடிக்கும் 50 அளாதி இரத்தம் இருக்கும். கவனிக்கவேண்டிய, காரியம் எஸ்ரேயேல் பள்ளத்தக்கிளிருந்து 176 மைல்கள் என்பது, அர்மகேதொன் யுத்தகளத்திலிருந்து, பெட்ரா என்ற இடம் தான் இருக்கும், என நான் நம்புகிறேன், வெளிப்படுத்தல் 12ம் அதிகாரம் 6 ம் வசனத்தில், தேவம் தமது ஜனத்தை பாதுகாக்கும்படி ஏற்ப்படுத்தின ஸ்தலம். அவர் அங்கு சென்று, அவர்கள் கூட்டி சேர்த்து, யோர்தான் பள்ளத்தாக்கை கடந்து அவர்கள், அவர் ஒலிவ மலையின் பின்புறமாக நடத்திவந்து,கிதரோன் பள்ளத்தாக்கை கடந்து, கிழக்கு வாயில் வழியாக ஆலய வளாகத்திற்குள் சேர்த்திடுவார். அந்த யூதர்கள், சகரியா 13:9ன்படி, அவரை தெய்வமாக இரட்சகராக ஏற்றுக்கொள்வார்கள். அவர் ஆலயத்திற்குள் பிரவேசித்து, அந்த நாளில் ராஜாதி ராஜாவாக தேவாதி தேவனாக அவர் மாகா பரிசுத்த ஸ்தலத்தில் வீற்றிருப்பார், யோம்கிப்பூர், நாளாயிருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இப்போதும் ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம். நாம் திரும்ப வந்ததும் இயேசுகிறிஸ்துவின் வருகையை பற்றியும் ஆயிர வருஷ அரசாட்சியை அவர் நிலைபடுத்துவதை பற்றியும் பார்க்க இருக்கிறோம். ஆயிர வருட அரசாட்சியில் என்ன சம்பவிக்கும்? இயேசுகிறிஸ்து பூமியில் என்ன செய்திடுவார்? என்ன மாற்றம் உண்டாகும் அது எங்கு எப்படி நம்மை பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கும் நித்திய வாழ்விற்கும் நேராக நடத்திடும்? இணைந்திருங்கள். நாம் மீண்டும் வரும்போது இதை பற்றி பார்த்திடுவோம்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக நாம் வெளிப்படுத்தின விசேஷத்தை படிப்படியாக பார்க்கிறோம். சரி, ஜிம்மி, மறுபடியும், நாம எங்க இருக்கிறோம் என்று சொல்லுங்க, இப்போது நாம் இயேசுகிறிஸ்து பூமிக்கு திரும்பி வருவதையும் இங்கு ஆயிர வருட அரசாட்சியை ஸ்தாபிப்பதையும் பார்க்க இருக்கிறோம். அந்த ஆயிறாண்டு அரசாட்சியில் அவர் என்ன செய்யப்போகிறார்? அதற்கு, முன்பு, நாம் பார்த்தவற்றை சொல்லுங்க.

**Dr. ஜிம்மி டியோங்**: வெல், இந்த தூண்கள் எடுத்துரைக்கும் 3 முக்கிய நிகழ்வுகளை பற்றி நாம் பேசினோம்: சபை எடுத்துக்கொள்ளப்படுதல், 7 ஆண்டு உபத்திரவ காலம், கிறிஸ்து பூமிக்கு திரும்பவும் வருகிறார், ஆயிர வருட அரசாட்சியையுடைய ராஜ்ஜியம், பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு, அதன்பிறகு நித்திய வாழ்வு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், அர்மகேதொன் யுத்தத்தை பற்றி எங்களுக்கு சொன்னீங்க. இப்ப இயேசுகிறிஸ்து திரும்பவும் வந்து அதில் ஜெயம்கொல்கிறார், இப்ப அவர் பூமிக்கு திரும்பிவிட்டார். அதற்கு பிறகு என்ன நடக்கும் ?

**Dr. ஜிம்மி டியோங்**: அவர் பூமிக்கு திரும்ப வரும்போது, அவருடைய ஆலயத்தை கட்டுவார். எசேக்கியல் 40-46 மொத்தம் 202 வசனங்கள், மேசியாவின் ஆலயத்தை பற்றி தெளிவான தகவல்களை அளிக்கிறது. ஆனால் அதற்கு முன்பு இருந்த ஒரு ஆசரிப்பு கூடாரம் எருசலேம் நகரத்தில் ஆலய பர்வதத்தில் இருந்த இரண்டு ஆலயங்ககளை பற்றி நமக்கு தெரியும். ஆனால் ஆசரிப்பு கூடாரமோ அல்லது இந்த 2 ஆலயங்களோ எசேக்கியல் 40-46ல் சொல்லப்பட்டிருப்பதற்கு, மேசியாவின் ஆலயத்திற்கு ஏற்றதாக இல்லை. இயேசு, சகரியா 6:12, ஆலயத்தை கட்டுகிறார். சகரியா 6 வசனம் 13, அந்த ஆலயத்திலிருந்து அவர் ஆளுகை செய்திடுவார்.

இது ஆயிர வருட அரசாட்சியில் நடக்கிறது. தேவன் யூதர்களுக்கு வாக்களித்திருக்கிறார், அவர்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்துவார் அந்த ராஜாவின் தமைத்துவத்துக்கு கீழாக ராஜ்ஜியம் அமைக்கப்படும். இயேசுகிறிஸ்து முதல் முறை வந்த பொது இந்த வார்த்தைகளை கூறினார், ஆனால் யூதர்கள் இயேசுகிறிஸ்துவை நிராகரித்தனர். இப்போது அந்த ராஜ்ஜியம் நிஜமானதாக பூமியில் நிற்கும். அநேகர் இப்போது நாம்

வாழ்கிற நாட்களில் இருக்கும் ராஜ்யத்தை பற்றி பேசுகிறார்கள். நாம் ராஜத்தின் கீழ் இல்லை. இயேசுகிறிஸ்து இப்போது அவருடைய சிங்காசனத்தில் இல்லை. அவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். எபிரேயர் புத்தகம், அதிகாரம் 1,8, 12 கூறுகிறது இயேசுகிறிஸ்து பரலோகத்தில் விசுவாசிகளாகிய நமக்காக பிதாவின் வலது பாரிசத்தில் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். ஆனால் ஒருநாள், எதிர்காலத்தில் காணக்கூடிய நிலையில், அர்மகேதொன் யுத்தம் நடந்து முடிந்த பிறகு, இயேசுகிறிஸ்து தமது பிதாவிடமிருந்து ராஜ்யத்தை பெற்றுக்கொள்வார். அவர் அந்த ஆயிர வருட அரசாட்சியின் காலத்தில் ஆளுகை செய்திடுவார்.

ஜான், அது சமாதானத்தின் காலமாக இருக்கும். சிங்கம் ஆட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும். இன்னும் பல காரியங்களை குறித்து பேசமுடியும் அதற்கும் முதலில், நாம் அவற்றை அறிந்திருக்கவேண்டும். நமக்கு பலவிஷயங்கள் தெரியாது என்று நான் சொல்வதற்கு காரணம் அந்த ராஜ்யத்தின் காலத்தை குறித்து வேதம் அதிகமாக சொல்லவில்லை. இயற்கையான சரீரத்தில் இருந்து உபத்திரவ காலத்திற்கு தப்பினவர்கள் அந்த கூட்டத்தில் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது: விசுவாசிகளாக மாறின யூதர்களும் புறஜாதிகளும். அவர் இரத்தசாட்சிகள் அல்ல, அவர்கள் ஆயிர வருட அரசாட்சியில் நுழைந்திடுவார்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட். அதை பற்றி பார்க்கலாம், இயேசுகிறிஸ்து மீண்டும் வரும் அந்த காரியத்திற்கு வருவோம். ஆயிர வருட அரசாட்சியை பற்றி சொல்லும் பம்பு, அந்திகிறிஸ்துவுக்கு என்ன நடக்கும் என்று மக்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள், மிருகத்திற்கு சாத்தானுக்கு என்ன ஆகும். கிறிஸ்து மீண்டும் வரும்போது என்ன நடக்கும்?

**Dr. ஜிம்மி டியோங்**: அர்மகேதொன் யுத்தத்தில், அந்த யுத்தம் முடிவடையும்போது, வெளிப்படுத்தல் 19ம் அதிகாரம், அந்திகிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் அக்கினி கடலில் தள்ளப்படுவார்கள். அந்த ஆயிர வருட காலத்திற்கு அங்கேயே இருப்பார்கள். சாத்தானை பிடிக்க இயேசு ஒரு தூதனுக்கு கட்டளை கொடுத்திடுவார், அவனை கட்டி பாதாளக்குழயில் தள்ளிடுவார்கள், அவனும் அங்கே ஆயிர வருடத்திற்கு கட்டப்பட்டிருப்பான். இந்த சமயத்தில் தேவன் தமது ஆயிர வருட அரசாட்சியை இங்கு நிறுவிடுவார். அது தேவனுடைய ஆட்சி, அவரே ஆளுவார். அந்த காலத்தில் யாருக்கும் எந்த அதிகாரமும் இருக்காது. அவருடைய திட்டப்படி நாம், எல்லாரும் அவரை சேவித்திடுவோம். கிறிஸ்துவை சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்ட நீங்களும் நானும், அவரது மணவாட்டியை, அந்த காலத்தில் அவரோடு சேர்ந்து ஆளுகை செய்வோம்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** நீங்க இப்ப சொன்னது முக்கியமான காரியமென்று நினைக்கிறேன். உண்மை இதுதான் விசுவாசிகளாகிய சிலர் நிச்சயம் ஆயிர வருட அரசாட்சியில் பங்காற்றிடுவார்கள். ஆனால் இன்னொரு காரியம் உபத்திரவ கால துவக்கத்தில் பூமியில் உள்ள விசுவாசிகள் அனைவரும் எடுத்துக்கொள்ளப்படுதலில் இங்கிருந்து சென்றிடுவார்கள். எனவே, அந்த ஜனங்கள் எல்லாரும், 2 சாட்சிகளின் நாட்களில் இரட்சிக்கப்பட்டவர்கள், 144,000பேர்

அந்திகிறிஸ்துவின் நாட்களின் தாக்குதல்களுக்கு தப்பித்து இயேசு கிறிஸ்துவின் வருகை வரைக்கும் தாக்குபிடித்து நின்றவர்கள். அந்த ஜனங்கள், மாற்றமடையாத அவர்கள் நாம், மற்றமடைந்திருக்கிறோம் – பரலோகத்தில் இருக்கிறோம், மற்றமடைந்திருக்கிறோம், நமக்கு புதிய சரீரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, பென்கொள்ளவும் பென்கொடுக்கவும் முடியாது – அதுதான் உண்மை, அவர்கள் தங்கள் மாம்ச சரீரத்தோடு ஆயிர வருட அரசாட்சிக்குள் நுழைகிறார்கள். அவர்களுக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள் அந்த பிள்ளைகள் வளருவார்கள். அப்படி பார்த்தால், அந்த நாட்களில், இருப்பவர்களுக்கு தெரிந்தெடுக்கும் சந்தர்ப்பத்தை தேவன் முன்வைத்திடுவார்.

**Dr. ஜிம்மி டியோங்**: உண்மைதான். அதற்கு காரணம், உதாரணமாக, வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரத்தை வாசிக்கும்போது, வசனம் 7,8,9 மற்றும் 10, சாத்தான் கொஞ்ச காலத்திற்கு அவிழ்கப்படுகிறான், அவன் போய் இயேசு கிறிஸ்துவை உண்மையாய் ஏற்று கொள்ளாதவர்களை வாதிக்கும்படியாக போகிறான். ஆனால் ஆயிர வருட அரசாட்சியின் முடிவில், சாத்தான் விடுதலையாக்கப்பட்டு, அவர்களை மோசம்போக்கி, இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக கடைசி யுத்தத்திற்காக அவர்களை எருசலேமில் கூட்டி சேர்ப்பான். உண்மையில் அது, சாதாரன யுத்தமாக இருக்காது – இயேசுகிறிஸ்து சாத்தானை நசுக்கிடுவார் அவனை அக்கினி கடலிலே தள்ளிடுவார், வேதம் கூறுகிறது, அங்குதான் அந்திகிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் இருக்கிறார்கள். அதற்கு பிறகு தான் பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு வரும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** பெரிய வெள்ளை சிங்காசன நியாய்தீர்ப்பில் என்ன நடக்கும்? அங்கே, யார் இருப்பா, யாருக்கு தீர்ப்பு, அந்த செய்திகள் எங்கிருந்து வரும் அவர்களுக்கு என்ன சம்பவிக்கும்?

**Dr. ஜிம்மி டியோங்**: இயேசுகிறிஸ்துவே நியாயாதிபதியாயிருப்பார். யோவான் 5:22, இயேசுகிறிஸ்துவுக்கு தேவன் பெரிய பொறுப்பை கொடுக்கிறார். பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பில் அவரே நியாயாதிபதியாய் இருப்பார். அந்த நாளில் தங்கள் வாழ்நாளில் இயேசுவை ரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்தவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.அவர்கள் உத்தரிப்பு ஸ்தலத்தில் பிடித்து வைக்கப்பட்டிருப்பார்கள், வாதிக்கப்படும் இடதிலுள்ளவர்கள், அவர்களெல்லாரும் பெரிய வெள்ளை சிங்காசன நியாதீர்ப்பில் நிறுத்தப்படுவார்கள்.

சரி, பெரிய வெள்ளை சிங்காசனம் எங்கிருக்கும்? அது நமக்கு தெரியாது. அங்கு, “வானமும் பூமியும் விலகிப்போனது பெரிய வெள்ளை சிங்காசனத்தை கண்டேன் என்றிருக்கிறது.” அது எங்கிருந்தாலும், இயேசு கிறிஸ்து நியாயாதிபதியாயிருப்பார், அவரை புறக்கணித்தவர்கள் நியாயந்தீர்க்கப்படும் படி நிற்ப்பார்கள். அவர் 2 விதமான புத்தகத்தை திறப்பார். அதில் ஒன்று, ஜீவ புஸ்தகம் என்ற புத்தகம், புத்தகங்கள், பன்மையிளுள்ளது. புத்தகம், அவர்களுடைய பெயர்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்படாமல் இருந்தால், அவர்கள் என்றென்றைக்குமாய் அக்கினி கடலிலே தள்ளப்படுவார்கள். அந்த புத்தகங்களில், இருக்கும் அவர்களுடைய கிரியைகளுக்கு தக்கதாய் நியாயந்தீர்க்கப்படுவார்கள், தீய கிரியைகலுக்கு , பெரிய வெள்ளை சிங்காசன

நியாயதீர்ப்பில் தீர்பளிக்கப்படும். அவரை புறக்கணித்த அனைவரும் உயிரோடு அக்கினி கடலிலே தள்ளப்படுவார்கள், “அங்கே புழு சாவதுமில்லை, அக்கினி அவியாமலும் இருக்கும்.” இயேசு கிறிஸ்து கூறியதை தான் நான் சொல்கிறேன், எனது கருத்தல்ல, இயேசுகிறிஸ்து மாற்கு 9ல் கூறியிருக்கிறார். இது நியாயத்தீர்ப்பின் கொடுமையான நேரம். இதைதான் இரண்டாம் மரணம் என்று கூறுகிறார்கள், இயேசுவை புறக்கணித்தவர்களுக்கு உரியது.

அது உங்களையும் என்னையும் அனைவரையும் ஊக்குவிக்கவேண்டும், ஜான், நமக்கு அன்பானவர்கள் இன்னும் இயேசுவை அறியாமல் இருக்கிறார்கள் என்றால், வரப்போகிற நியாயதீர்ப்பை பற்றி கூறி எச்சரிக்க வேண்டும், இந்த பெரிய வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு. இங்க நிற்பவர்கள் யாராக இருப்பார்கள் என்றால் கைவிடப்பட்டவர்கள் மட்டும்தான். அவர்களுடைய சுய தீர்மானத்தினால் அங்கிருக்கிறார்கள், தேவன் அவர்களை  செய்யும்படியாக சொன்ன காரியத்தினால் அல்ல. நியாயத்தீர்ப்பின் கொடுமையான நேரம் அது. அதுமட்டுமல்ல. இதுதான் வரலாற்றின் முடிவாக இருக்கிறது. ஆதியாகமத்தில் சொல்லப்படுகிறது, “ஆதியிலே தேவன் சிருஷ்டித்தார்.” சரித்திரம் துவக்கின இடம். இது அந்த சரித்திரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து நித்திய வாழ்விற்குள் கொண்டு செல்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** புதிய வானங்கள் புதிய பூமியை பற்றி சொல்லுங்க.

**Dr. ஜிம்மி டியோங்**: புதிய வானங்கள் மற்றும் புதிய பூமி, அது சுவாரஸ்யமாக இருக்கும். ஏசாயா புத்தகத்தில், 65மற்றும் 66ம் அதிகாரம், புதிய வானங்கள் மற்றும் புதிய பூமியை பற்றி கூறுகிறது, அதனால் வெளிப்படுத்தலில் இது புதிய விஷயம் அல்ல. ஆனால் 21ம் அதிகாரம் கூறுகிறது – 2 பேதுரு 3ரிலும் – இந்த பழைய பூமி, பாவத்தால் பூமி சபிக்கப்பட்டது, பாவத்தால் வானம் சபிக்கப்பட்டது, இதில், எல்லாமே அடங்கும், முதல் வானம், இரண்டாம் மூன்றாம் வானங்களும். மூன்றாம் வானத்தில் தான் தேவன் இருக்கிறார். ஆனால் நினைவிருக்கட்டும், 12ம் அதிகாரம், 10ம் வசனம், வெளிப்படுத்ஹ்டின விசேஷத்தில் கூறப்பட்டுள்ளது சாத்தான் சகோதரர்களை குற்றப்படுத்துகிறவன் இரவும் பகலும் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக சென்று, நாம் செய்யும் தவறான காரியங்களுக்காக நம்மை குற்றப்படுத்துகிறான். இருந்தாலும், இயேசுகிறிஸ்து நமக்காக பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். ஆனா அதற்கு அர்த்தம் மூன்றாம் வானமும் சபிக்கப்பட்டது. அதுவும் எரிக்கப்பட வேண்டும். அப்போது தேவன் சிருஷ்டிப்பார், புதுப்பிப்பார் என்றில்லை, புதிய வானத்தை சிருஷ்டிப்பார், புதிய பூமியை உண்டாக்குவார். அங்கு நாம் புதிய எருசலேமையும் காண்போம்.

புதிய எருசலேம் பற்றி 21 மற்றும் 22ம் அதிகாரங்கள் விளக்குகிறது. புதிய எருசலேமை பற்றி பேச இன்னும் 5 நிகழ்ச்சிகள் வேண்டும். அது வியப்பூட்டும் இடமாக இருந்திடும். 1500 மைல் உயரமும், அகலமும் நீளமுமாயிருக்கும். தங்கத்தாலான ஓரே வீதியிருக்கும். ஜனங்கள் தங்கத்தாலான வீதிகள் என்பார்கள், தங்கத்தாலான வீதிகள் என்று ஒன்றும் இல்லை. 21ம் அதிகாரம், தங்கத்தாலான வீதி இருக்கும் என்று கூறுகிறது. 22ம் அதிகாரத்தில், போன்னின்னாலான வீதி. ஏனென்றால் புதிய எருசலேமில் நாம் பிரதான வீதியில் தான் வசித்திடுவோம்.

அது பூமியில் இருக்காது, அதற்க்கு காரணம் எசேக்கியலில் சொல்லப்பட்டிருக்கிறது, அவருடைய ஆலயம் என்றன்றைக்குமாய் எருசலேமில் இருக்கும். 21ம் அதிகாரம், 22ம் வசனம், வெளிப்படுத்தலில், சொல்லப்படுகிறது புதிய எருசலேமில் எந்த ஆலயமும் இருக்காது, ஏனென்றால் தேவனும் இயேசுவும் அங்கே இருப்பார்கள். 12 பவள வாசல்கள்: வடக்கே 3, கிழக்கே 3, மேற்க்கே 3, தெற்க்கே 3, இஸ்ரவேல் கொத்திரத்ஹ்டின் நாமங்களில் இருக்கும். யூதர்கள் பூமியிலருந்து புதிய எருசலேமிற்குள் பிரவேசித்திடுவார்கள். பூமிக்கு மேல் எங்கோ ஒரு இடத்தில் இருக்கும் நாம் அங்கு இயேசுவுடன் நித்தியா நித்தியமாக இருப்போம்.

தொடர்ந்து பேச நினைக்கிறேன். எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை விளக்கும் அருமையான பகுதி. நாம், அப்போது, அந்த நேரத்தில் அவரை தொழுதுகொள்ளுகிறவர்களாக இருப்போம். நாம் அவரை ஆராதிப்போம், ஆதிமுதலாய் இருக்கும் பரிசுத்தவான்களை நாம் சந்தித்திடுவோம். இயேசு, வெளிப்படுத்தின விசேஷத்தை முடிக்கும் போது, வெளிப்பாட்டை பெற்ற யோவானுக்கு தூதன் மூளும் சொல்கிறார், “இதோ, சீக்கிரமாய் வருகிறேன். இந்த புத்தகத்தில் உள்ள வார்த்தைகளை காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்.” அவர் மறுபடியும் சொல்லுகிறார். “இதோ, சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுக்குரிய பலன் என்னோடே கூட வருகிறது.” பலனளிக்கும் படி, நித்தியத்தில் என்ன செய்வோம் என்பதை அப்போது அறிந்துகொள்வோம். கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நாம் பெற்றுக்கொள்ள இருக்கும் பலன்கள் அதுதான், அதுவே நித்தியத்தில்  நித்திய நித்தியமாய் நாம் என்ன செய்திடுவோம் என்பதை நிர்ணயிக்கிறது, அவரை சேவித்ஹ்டிடுவோம், அவரை தொளுதுகொள்வோம் அவரோடு ஐக்கியப்பட்டிருப்போம்.

சரி இறுதியாக, ஒரு காரியத்தை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன், இதோ, என்று 3 முறை வருகிறது. யோவான், வெளிப்பாட்டை பெற்றவர் சொல்கிறார், இயேசு மூன்றாம் முறை இப்படி சொன்னதும், “இதோ, சீக்கிரமாய் வருகிறேன். அதற்கு, இயேசுவே, வாரும் என்றார்”.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஜிம்மி, மிகவும் அருமையாக இருந்தது. நேயர்களே, நாம் வெளிப்படுத்தல் புத்தகத்தை விளக்கமாக பார்த்துக்கொண்டிருக்கிறோம், அதினால் தேவன் கூறியிருக்கும் முக்கியமான திறவுகோல் காரியங்களை அறிந்திருப்பீர்கள், எதிர்காலத்தை பற்றி அறிந்துகொள்ள வேண்டும். சரி, ஜிம்மி வெளிப்படுத்தலின் ஊடாக நம்மை நடத்தி சென்றார், துரிதமாக முடித்துவிட்டோம், உங்கள் மனதில் நிச்சயம் சில கேள்விகள் எழும்பியிருக்கும் என்பதை அறிவேன், அவர் சொன்ன அனைத்தையும் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அடுத்த அரைமணி நேரத்தில் அந்த கேள்விகளை நாம் பார்க்க இருக்கிறோம், நீங்களும் இணைந்திருப்பீர்கள் என நம்புகிறேன். இந்த காரியங்களை கேட்டதன் மூலமாக எலும்பின சில முக்கியமான கேள்விகளுக்கு விளக்கமாக பதிலளிக்கும்படி கேட்க்க இருக்கிறேன். அடுத்த வாரம் நிகழ்ச்சியை தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.